இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 84 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 17 – ஞாயிற்றுக்கிழமை 03 நவம்பர் 2024 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 84 : Thiruvalluvar Year - 2055 - Appasi 17 - Sunday 03 November 2024 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### தமிழ் பேசப்படும் பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காகப் போராடிய

# எல்லைப் போராட்டத் தியாகிகளைப் போற்றி வணங்குகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, நவ. 3 -**

**நேற்று முன்தினம், எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், "தமிழ் பேசப்படும் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காகப் போராடிய அனைவரையும், எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளில் போற்றி வணங்குகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

திருவாங்கூர் சமஸ்தானத்தின் கீழ் இருந்த கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழ்நாட்டுடன் இணைக்க வலியுறுத்தி, மார்ஷல் நேசமணி தலைமையில் போராட்டம் நடைபெற்றது. தமிழர்கள் அதிகம் வாழ்ந்த குமரி மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைக்க நடைபெற்ற போராட்டத்தில் கேரள போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 10க்கும் மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் மாயமாகினர்.

**தமிழ்நாட்டுடன் கன்னியாகுமரி இணைப்பு!**

**69ஆம் ஆண்டு துவக்க விழா!**

இந்தப் போராட்டத்தையடுத்து, குமரி மாவட்டம், 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது. அதன் 69ஆம் ஆண்டு துவக்க விழா நேற்று முன்தினம் (1.1.2024) கொண்டாடப்பட்டது. இதனையொட்டி, நாகர்கோவிலில் உள்ள மார்ஷல் நேசமணியின் நினைவு மண்டபத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, தமிழ்நாடு அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.



இவ்வாறு தமிழ்நாட்டின் எல்லை காக்க தங்கள் இன்னுயிரை ஈந்த தியாகிகளின் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 1ஆம் தேதி 'எல்லைப் போராட்ட தியாகிகள் நாளாக' தமிழ்நாடு அரசால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நாளையொட்டி முதல்வர் அவர்கள் நேற்று முன்தினம் விடுத்த வலைதளப் பதிவு வருமாறு:-

**தெற்கிலும் வடக்கிலும் பல இடங்களில் போராடி தமிழ்நாட்டின் எல்லையைக் காத்த மாவீரர்களின் தியாகத்தைப் போற்றும் நாள், நவம்பர் 1 !**

**தமிழர் வாழும், தமிழ் பேசப்படும் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காகப் போராடிய அனைவரையும் எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளில் போற்றி வணங்குகிறேன்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### 'மிக்ஜாம்' புயலால் சேதமடைந்த

# செம்பரம்பாக்கம் ஏரிக்கரை - ரூ.22 கோடியில் சீரமைப்பு!

## தமிழ்நாடு நீர்வளத்துறை நடவடிக்கை!

**சென்னை, நவ. 3-**

**மிக்ஜாம் புயலால் சேதமடைந்த செம்பரம்பாக்கம் ஏரிக்கரையை 22 கோடி ரூபாயில் சீரமைக்க தமிழ்நாடு நீர்வளத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.**

தமிழ்நாடு நீர்வளத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் முக்கிய குடிநீர் ஆதாரமாக செம்பரம்பாக்கம் ஏரி உள்ளது. இந்த ஏரியின் கரைகள், மிக்ஜாம் புயலால் சேதமடைந்ததாகவும், இதனால், 22 கோடி ரூபாய் மதிப்பில், செம்பரம்பாக்கம் ஏரிக்கரையைச் சீரமைக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6 ஆயிரத்து 300 ஏக்கர் பரப்பளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில், 3 ஆயிரத்து 645 மில்லியன் கன அடி நீரை தேக்கி வைக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் முக்கிய குடிநீர் ஆதாரமாக செம்பரம்பாக்கம் ஏரி உள்ளது 6,300 ஏக்கர் பரப்பளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில் 3,645 மில்லியன் கன அடி நீரைத் தேக்கி வைக்க முடியும்.

---

# 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' முறை ஒருபோதும் சாத்தியமற்றது!

## அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே திட்டவட்டம்!

*சென்னை, நவ. 3 -*

ஒரே நாடு, ஒரே தேர்தல் முறை சாத்தியமற்றது என அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் கேவாடியா பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, இந்திய ஜனநாயகத்தை வலுப்படுத்தும் விதமாக 'ஒரே நாடு ஒரே தேர்தல்' முறையைக் கொண்டு வருவதற்காக உழைத்து வருவதாகவும், இந்தியா பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நோக்கி நகர்ந்து கொண்டு வருவதாகவும் கூறினார்.

மோடியின் இந்தப் பேச்சுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பிரதமர் மோடி அவர் சொல்வதை ஒருபோதும் செய்ய மாட்டார் என விமர்சித்தார்.

ஏனென்றால், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் அனைவரின் கருத்தும் ஒன்றாக இருந்தால் மட்டுமே இது சாத்தியம், அந்த வகையில், ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது சாத்தியமற்றது என திட்டவட்டமாகக் கூறினார்.

---

# உண்மைக் கதைகளை இளைஞர்களிடம் கொண்டு சேர்ப்பது மகிழ்ச்சியளிக்கிறது!

## 'அமரன்' திரைப்படம் பார்த்து விடுத்த வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!



**சென்னை, நவ. 3 -**

**கலைஞானி கமல்ஹாசன் அவர்களின் அழைப்பை ஏற்று 'அமரன்' திரைப்படம் காணச் சென்று வந்ததை அடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில்,**

**"புத்தகங்களைப் போல் திரைப்பட வடிவிலும் உண்மைக் கதைகளை இன்றைய இளைஞர்களிடம் கொண்டு சேர்ப்பது மகிழ்ச்சியளிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

"நண்பர் கலைஞானி அவர்களது அன்பு அழைப்பை ஏற்று, அமரன் திரைப்படம் பார்த்தேன்.

புத்தகங்களைப் போல் திரைப்பட வடிவிலும் உண்மைக் கதைகளை இன்றைய இளைஞர்களிடம் கொண்டு சேர்ப்பது மகிழ்ச்சியளிக்கிறது!

தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களது வீரத்தையும் அர்ப் பணிப்பையும் உணர்வுப்பூர்வமாகப் படமாக்கியுள்ள இயக்குநர் கே.பி.இராஜ்குமார், மேஜர் முகுந்த் வரதராஜன், இந்து ரெபேக்கா வர்கீஸ் ஆகியோரது பாத்திரங்களைத் தங்களது நடிப்பால் சிறப்பாக வெளிப்படுத்திய தம்பி சிவகார்த்திகேயன், சாய் பல்லவி மற்றும் 'அமரன்' படக் குழுவினர் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்!

நாட்டைப் பாதுகாக்கும் நமது இராணுவ வீரர்களுக்கும் நம் நினைவில் வாழும் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களுக்கும் Big Salute!"

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# கோவையில் நவ. 5, 6 தேதிகளில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சுற்றுப் பயணம்!

## 'திராவிட மாடல்' அரசின் திட்டங்களின் நிலைகுறித்து ஆய்வு செய்கிறார்!

**சென்னை, நவ. 3-**

**திராவிட மாடல் அரசின் திட்டங்களின் நிலைகுறித்து கோவையில் வருகிற நவம்பர் 5 மற்றும் 6 ஆகிய இரு தேதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு நடத்துகிறார். அதைத் தொடர்ந்து மற்ற மாவட்டங்களில் கள ஆய்வை நடத்தப் போவதாகவும் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.**

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில்,

"அமெரிக்கப் பயணத்திற்கு முன்பாகவே நான் கேட்டுக் கொண்டபடி, அமைச்சர்கள் பலரும், அவரவர் துறை சார்ந்த மற்றும் மாவட்டங்களில் உள்ள பணிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை அளித்திருந்தனர்.

எதிர்வரிசையிலே இருப்பவர்கள், திராவிட மாடல் அரசு மீது அடிப்படையில்லாத அவதூறுகளைப் பரப்ப முனைந்து, அதிலும் முனை முறிந்து போயிருக்கிறார்கள்.

திராவிட மாடல் அரசு தனது திட்டங்களை முழுமையாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கையுடன் உள்ள தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், பண்டிகை நாட்கள் முடிவடைந்த பிறகு, நவம்பர் 5, 6 தேதிகளில் கோவைக்குச் சென்று கள ஆய்வினைத் தொடங்க இருக்கிறேன்.

மற்ற மாவட்டங்களிலும் தொடரவிருக்கிறேன். **கள ஆய்வும் தொடரும், திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களும் தொடரும்!**

"அரசு சார்ந்த பணிகளை மட்டும்தான் கவனிப்பீர்களா?" என்று உடன்பிறப்புகளான உங்களின் மனக்குரலை 'உங்களில் ஒருவனான' நான் அறிவேன். கள ஆய்வுப் பணிகளை அந்தந்த மாவட்டங்களில் நிறைவு செய்தபிறகு, கழகப் பணிகளையும் ஆய்வு செய்வேன்.

கண்மணிகளாம் உடன்பிறப்புகளையும் நேரில் கண்டு நெஞ்சம் மகிழ்வேன்!"

- என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்தார்கள்.

தமது இவ்வறிவிப்புக்கொப்ப, திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்களின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்திட கோவையில் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

---

### ஒன்றிய அரசின் தீபாவளி வாழ்த்து!

